**Election OP.No.371/2023**

**PW.1** முத்துலட்சுமி

14-10-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது முதல் சாட்சியத்தை படித்து பார்த்து புரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்துள்ளேன். தேர்தல் முறையாக நடக்கவில்லை என்று நான் மனு தாக்கல் செய்துள்ளேன். 28-01-2022 ல் தேர்தலை பற்றிய அறிவிப்பாணை வந்தது. வேட்பு மனு தாக்கல் 28-01-2022 ல் தொடங்கி 09-02-2022 ல் முடிவடைந்தது. நான் 19 வது வார்டில் போட்டியிட்டேன். நான் 04-02-2022 ல் நாமினேஷன் தாக்கல் செய்தேன். 19 வது வார்டிற்கு மொத்தம் 7 பேர் போட்டியிட்டோம். வேட்பு மனுக்கள் கடைசியாக எப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டது என்று எனக்கு சரியாக தேதி நினைவில்லை. எத்தனை வேட்பாளர்களின் மனு அனுமதிக்கப்பட்டது மற்றும் நிராகரிக்கப்பட்டது என்று தற்பொழுது எனக்கு நினைவில்லை. எனது முதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் 5 ஆம் எதிர்மனுதாரர் வார்டு எண் 66 ல் போட்டியிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 5 ஆம் எதிர்மனுதாரர் வாக்காளர்களுக்கு எந்த தேதியில் ரூ.5000/- பணம் கொடுத்தார் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 5 ஆம் எதிர்மனுதாரர் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறார் என்று நான் எழுத்துமூலமாக புகார்

கொடுத்தேன். எந்த தேதி என்று எனக்கு தற்பொழுது நினைவில்லை. அந்த புகாரின் நகலையோ, அதை முதல் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டார் என்பதை காட்டுவதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 5 ஆம் எதிர்மனுதாரர் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தார் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தற்பொழுது 5 ஆம் எதிர்மனுதாரர் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தார் என்று தான் புகார் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். 19-02-2022 தேதி சரவணம்பட்டி காவல் நிலையத்தில் 5 ஆம் எதிர்மனுதாரர் வாக்காளர்களுக்கு வெள்ளி கொலுசு, ஹாட்பாக்ஸ் போன்றவற்றை கொடுப்பதாக நான் புகார் அளித்தேன். புகார் ஏற்பு சான்றிதழ் எனது வழக்கறிஞரிடம் உள்ளது. 19-02-2022 அன்று வாக்குபதிவு நடந்து கொண்டிருந்த சமயத்தில் மதியம் சுமார் 3 மணி அளவில் நான் புகார் கொடுத்தேன். நான் புகார் எதுவும் சரவணம்பட்டி காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 19 வது வார்டில் 6000 த்திற்கு மேல் வாக்காளர்கள் இருந்தார்கள். எனது பெயர் வாக்காளர்கள் பட்டியலில் பாகம் 222 ல் 1324 எண்ணாக இருந்தது. எனது வேட்பு மனுவை முன்மொழிந்த நபர் யார் என்று தற்போது எனக்கு நினைவில்லை. 19 வது வார்டிற்கு 19 வாக்கு சாவடிகள் இருந்தன. 19 வாக்குசாவடிகளும் எங்கு, எங்கு

இருந்தது என்று எனக்கு சரியாக தற்பொழுது நினைவில்லை. 19 வது வார்டிற்கு பூத் ஏஜெண்டுகள் அனைத்து வாக்குசாவடிகளிலும் எங்கள் கட்சி சார்பாக நியமிக்கப்பட்டு அவர்கள் பணியில் அன்று இருந்தார்கள் என்றால் சரிதான். வாக்கு பதிவு மையங்கள் அனைத்தும் காவல் துறை பாதுகாப்புடன்தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். பகல் முழுவதும் நல்ல நிலைமையில் வாக்குபதிவு நடைபெற்றது. முடிவுறும் நிலையில் சற்று சலசலப்பு ஏற்பட்டது. தேர்தல் அமைதியான முறையில் நடந்ததாக மறுநாள் செய்தி தாள்களில் வெளியிடப்பட்டது என்று சொன்னால், சில இடங்களில் பிரச்சனைகள் இருந்ததாக செய்தி தாள்களில் வந்தது. ஆனால் 19 வது வார்டில் பிரச்சனை இருந்ததாக எந்த செய்திதாளிலும் வரவில்லை. மணியகாரம்பாளையத்தில் உள்ள அரசு பள்ளியில் நான் காலை 7.10 மணிக்கே எனது வாக்கை பதிவு செய்தேன். நான் மனுவில் கூறியுள்ளதுபோல வாக்காளர்களை வாக்கு பதிவு செய்ய விடாமல் யாரும் தடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக தடுத்தாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த தேர்தலானது சட்ட விதிமுறைகளை பின்பற்றி சரியான முறையில் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. 22-02-2022 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. ஜி.சி.டி கல்லூரியில் எண்ணிக்கை நடந்தது. 22-02-2022 வாக்கு எண்ணிக்கையின்பொழுது பகல் சுமார் 12 மணி அளவில் நான் வாக்கு எண்ணும் மையத்திற்கு சென்றேன். வாக்கு எண்ணும் மையத்திற்கு நான் 22-02-2022

அன்றுதான் சென்றேன். சுமார் ஆராயிரத்திற்கு மேல் வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. நான் 1723 வாக்குகள் பெற்றிருந்தேன். 5 ஆம் எதிர்மனுதாரர் எவ்வளவு வாக்குகள் பெற்றார் என்று எனக்கு தற்பொழுது நினைவில்லை. வாக்கு எண்ணிக்கை மையத்திலும் என் சார்பில் எங்கள் கட்சியை சார்ந்த முகவர்கள் முழுமையாக பணியாற்றினார்கள். வாக்கு எண்ணிக்கை முழுவதும் சி.சி.டி.வி யால் கண்காணிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாக்கு பதிவும், வாக்கு எண்ணிக்கையும் முறையாகத்தான் நடந்தது என்றும், எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 22-02-2022 அன்றே 5 ஆம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றதாக அவருக்கு சான்று கொடுத்தார்கள் என்றால் சரிதான். 18-03-2022 அன்றுதான் அவரது வெற்றி செல்லாது என்று நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். தேர்தலில் எந்த முறைகேடும் நடக்காத காரணத்தினால்தான் உடனடியாக புகார் எதுவும் கொடுக்காமல் சுமார் ஒரு மாதம் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.7 அனுப்பபட்டதற்கான ஆதாரம் மற்றும் அதை பெற்று கொண்டதற்கான எவ்வித ஆதாரங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தேர்தலில் தோல்வியுற்றதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனது மனுவில் எந்த உண்மை தன்மையும் இல்லை என்றும், அதனால் எனது மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எவ்விதமான

ஆவண ஆதாரங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டப்பூர்வமாக தேர்தல் நடந்ததால் எனது மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**( 3 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்களின் தரப்பில் வேண்டுதலுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

sd/ முத்துலட்சுமி,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.